தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**23.09.2013**

## வெங்காயத்தின் விலை 2 மடங்கு உயர்வு: பதுக்கலே காரணம் என குற்றச்சாட்டு



கடந்த ஆண்டைவிட வெங்காயத்தின் விலை தற்போது 2 மடங்கு அதிகரித்துள்ளது.பதுக்கல் காரணமாகவே வெங்காயத்தின் விலை உயர்ந்து வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. எனவே பதுக்கலைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் காய்கறிகளில் வெங்காயம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆனால் வெங்காயத்தின் விலை நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த ஓராண்டில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், முட்டைக்கோஸ் உள்ளிட்ட காய்கறிகளின் விலை 10 முதல் 20 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. ஆனால் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.20-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வெங்காயம் இரண்டு மடங்குக்கு மேல் அதிகரித்து தற்போது ரூ.55 முதல் 60 வரை விற்கப்படுகிறது.

ஒரு குவிண்டால் (100 கிலோ) வெங்காயத்தை ரூ.1,500 முதல் ரூ.2,000 வரை விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்கின்றனர். ஆனால் மார்க்கெட்டில் ஒரு குவிண்டால் வெங்காயம் ரூ.4,000 முதல் 5,500 வரை விற்பனை செய்யப்படுகிறது. மார்க்கெட்டுக்கு லாரிகள் மூலம் கொண்டுவரப்படும் ஒரு மூட்டை வெங்காயத்தில் சராசரியாக 50 முதல் 55 கிலோ வரை உள்ளது. 5 சதவீதம் வரை சருகு மற்றும் சேதமடைவதாகவும் தொடர்ந்து வரத்து குறைவாக உள்ளதாகவும் வியாபாரிகள்

தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சனிக்கிழமை வரை வெங்காயத்தின் விலை சிறிதும் குறையவில்லை.

வெங்காயத்தின் உற்பத்தி மற்றும் விலை உயர்வு குறித்து வேளாண்மைத்துறை அதிகாரி ஒருவர் கூறியது:

இருப்பு வைத்து விற்பனை: குளிர் பதனக் கிடங்கு மூலம் வெங்காயத்தை அதிகபட்சம் 6 மாதம் வரை அழுகாமல் வைத்திருக்க முடியும். வெங்காயம் பயிரிட்ட இடங்களில் நாங்கள் கள ஆய்வுக்கு சென்றபோது, "மொத்த வியாபாரிகள் எங்களிடம் அதிகளவு வெங்காயத்தை கொள்முதல் செய்து குளிர்பதன கிடங்குகளில் இருப்பு வைத்து விடுகிறார்கள். இதனால் விலை அதிகரித்தும் உற்பத்தியாளர்களாகிய எங்களுக்கு எந்த பயனும் இல்லை என விவசாயிகள் தெரிவித்தனர். உணவில் அத்தியாவசியமாகிவிட்ட வெங்காயத்தின் விலை கடந்த 5 மாதங்களில் தொடர்ந்து ஏறுமுகமாகவே காணப்படுகிறது' என்றார்.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் வியாழக்கிழமை முதல் தரம் கொண்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.55 முதல் 65 விற்பனையானது. புதியவை என்று வியாபாரிகளால் கூறப்படும் இரண்டாம் தர வெங்காயம் ஒரு கிலோ ரூ.45 முதல் ரூ.50 வரை விற்கப்படுகிறது.

இது குறித்து மொத்த வியாபாரி நாகலிங்கம் கூறியது:-

வரத்து குறைவு: வரத்து குறைந்துள்ளதால் மட்டுமே வெங்காயம் விலை உயர்ந்துள்ளதே தவிர பதுக்கி வைத்து விற்பனை செய்கிறோம் என்பதை எற்றுக்கொள்ள முடியாது. பருவமழை அதிகரித்து புனே, நாசிக் பகுதிகளில் உற்பத்தி அதிகரித்தால் வெங்காயத்தின் விலை குறைய வாய்ப்பு உள்ளது என்றார்.

வியாபாரிகள் தரப்பில் இவ்வாறு கூறினாலும், வரத்து குறைந்து போனதற்கு பதுக்கலே காரணம் என்று கூறப்படுகிறது.

தற்போதுள்ள நிலை நீடித்தால் அன்றாட தேவைகளுக்கு வெங்காயத்தையே பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். அதனால் விவசாயிகளிடம் இருந்து வெங்காயத்தை நேரடியாக அரசு கொள்முதல் செய்து மக்களுக்கு குறைந்த அளவில் விற்பனை செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

மணிமங்கலம் கால்நடை மருத்துவமனை சார்பாக சேத்துப்பட்டு ஊராட்சியில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் தேவன் தலைமை வகித்தார், மணிமங்கலம் கால்நடை மருத்துவமனை மருத்துவர் திவ்யா முன்னிலை வகித்தார். தற்போது பெய்து வரும் மழையின் காரணமாக கால்நடைகளுக்கு அதிகளவில் கோமாரி நோய் தாக்கப்பட்டு

வருகிறது. கோமாரி நோய் வராமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கிராமத்தில் உள்ள சுமார் 400க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவர்கள் தடுப்பூசி போட்டனர். முகாமில் கால்நடை மருத்துவர்கள் சங்கீதா, உதயலதா, உதவியாளர் குருச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

காஞ்சிபுரத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது.

இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை:

மாடுகள், பன்றிகள், யானை போன்ற கால்நடைகள் சோமாரி நோயால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன.

இந்நோய் தாக்கமுள்ள கால்நடைகளில் இருந்து மற்ற கால்நடைகளுக்கும் காற்று மூலமாக இந்நோய் எளிதில் பரவுகிறது.

இந்நோயால் பாதிக்கப்படும் கால்நடைகளுக்கு உதடுகள், ஈறுகள், வாய், நாக்கு போன்ற பகுதிகளில் மெல்லிய தோலுடன் கூடிய கொப்பளம் ஏற்படும்.

இதனால் கால்நடைகளுக்கு ஏராளமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. இது போன்ற நோயுற்ற மாடுகளுக்கு காய்ச்சிய கஞ்சியினைக் குடிக்கக் கொடுக்கலாம்.

பாதிக்கப்பட்ட புண்களில் பொட்டாசியம் பெர்மாங்கனைட் கரைசல் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். வேப்ப எண்ணெய்யும் தடவலாம்.

இந்நோய் பாதிக்கப்படும் முன்பாகவே கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவது சிறந்தது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த தடுப்பூசிகள் தற்போது இலவசமாக போடப்பட்டு வருகிறது.

இத்தடுப்பூசி போடுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி 4 மாதம் முதல் 6 மாத காலம் வரை நீடிக்கும்.

இது குறித்த விவரங்களுக்கு 94450 01130 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை இலவச முயல் வளர்ப்பு பயிற்சி

காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தில் இலவச முயல் வளர்ப்பு பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை (செப்.24) நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி காலை 10 மணிக்கு தொடங்குகிறது. சிறிய இடத்தில், குறைந்த செலவிலேயே முயல்களை வளர்க்க முடியும்.

ரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோயாளிகளுக்கு முயல் மாமிசம் மிகவும் நல்லது. எனவே குறைந்த செலவில் முயல் வளர்த்து அதிக லாபம் சம்பாதிக்க முடியும்.

முயல் வளர்ப்பு இலவச பயிற்சியில் பங்கேற்ற விருப்பமுள்ளவர்கள், காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் 044 - 27264019 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டும் முன்பதிவு செய்து கொள்ளலாம் என காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தின் தலைவர் வெங்கட சுதாகரராவ் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருளர்களுக்கு விலையில்லா ஆடுகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 100 இருளர்களுக்கு 1000 விலையில்லா ஆடுகளை அமைச்சர் டி.கே.எம். சின்னையா வழங்கினார்.

தமிழகத்தில் விலையில்லா ஆடுகள், மாடுகள் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு தலா 1 கறவை மாடு அல்லது 4 ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த இருளர்களுக்கு சிறப்புத் திட்டத்தின்படி தலா 10 ஆடுகள் அல்லது தலா 1 கறவை மாடு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி மாவட்டம் முழுவதும் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர், திருக்கழுகுன்றம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 200 இருளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளில் 100 பேருக்கு தலா 10 ஆடுகள் வீதம் 1000 ஆடுகளும், 100 பேருக்கு தலா 1 கறவை மாடு வீதம் 100 கறவை மாடுகளும் ஆட்சியர் லி. சித்ரசேனனின் அறிவுரையின்படி கால்நடைப் பராமரிப்புத் துறை அதிகாரிகளால் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டன.

இந்நிலையில் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடு, கறவை மாடு வழங்கும் விழா சித்தாமூர் அருகே பவஞ்சூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள், ஆடுகளை வழங்கினார்.

இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ராஜேந்திரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி. சோமசுந்தரம், கணிதா சம்பத், செய்யூர் ராஜி, தண்டரை மனோகரன், கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கோதண்டராமன், உதவி இயக்குநர் ஆன்டேனி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளிடம் கொள்ளை அடிக்கும் தனியார் பூ மார்க்கெட்டை அகற்ற கோரிக்கை

திருத்தணியில் ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் வகையில் கொள்ளை அடிக்கும் தனியார் பூ மார்க்கெட்டை அகற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் விவசாயிகள் முறையிட்டனர்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம் ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில், விவசாயிகள் பேசியது: திருவள்ளூர்- செங்குன்றம் நெடுஞ்சாலையில் தொடர்ந்து குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாவதுடன், சாலையும் கடுமையாக சேதமடைந்துள்ளது.

இதை உடனடியாக சீரமைக்க வேண்டும். திருவாலங்காட்டில் பாகசாலை- சிறுமனூர் சாலையை மழைக்காலத்துக்கு முன்பே சீரமைக்க வேண்டும்.

வடமதுரை பஸ் நிறுத்தத்தில் அனைத்து பஸ்களும் நின்றுச் செல்ல இக்கூட்டத்தில் மனு கொடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகையால் இந்த கூட்டத்திலாவது இதற்குத் தீர்வு வேண்டும். திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் பெரியகுப்பத்தில் இருந்து மணவாளநகர் செல்ல சுரங்கப் பாலம் அமைக்க வேண்டும்.

கருணாகரச்சேரியில் தரிசாக உள்ள 80 ஏக்கர் நிலத்தை விட்டுவிட்டு மூன்று போகம் விளையும் பொன் பூமியை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினர் எடுக்க முயற்சித்து வருகின்றனர்.

அதைத் தடுத்து, தரிசு நிலத்தை கையகப்படுத்த உத்தரவிட வேண்டும்.

மாவட்டத்திலேயே பெரிய பூ மார்க்கெட் திருத்தணியில் உள்ளது. இந்த மார்க்கெட்டில் ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலத்தில் இருந்து ஏராளமானோர் தினசரி இங்கு வந்து வணிகத்துக்கு பூ வாங்கிச் செல்கின்றனர்.

இந்த மார்க்கெட்டில் தனியார் சிலர், விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதுபோல் 22 சதவீத கமிஷனை பெற்றுக் கொள்கின்றனர்.

மேலும் ஒரு கிலோ பூ எடை போட்டால் 900 கிராம் மட்டுமே கணக்கில் எழுதுகின்றனர். எடையை கைத் தராசில் போட்டு அதிலும் கொள்ளை அடிக்கின்றனர்.

எனவே இதுபோல் ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் இந்த மார்க்கெட்டை காலி செய்து திருத்தணியில் பூ வியாபாரத்துக்கு என அரசு தரப்பில் கட்டப்பட்டுள்ள மார்க்கெட்டை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என முறையிட்டனர்.

மாவட்ட ஆட்சியர் பேசியது: விவசாயிகள் கோரிக்கை குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இம்மாவட்டத்தில் ஓராண்டுக்கு சராசரியாக 1,152 மில்லி மீட்டர் மழை பெய்யும். இந்த ஆண்டு செப்டம்பர் வரை சராசரியாக 548.7 மில்லி மீட்டருக்கு பதிலாக 665 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

இச்சூழ்நிலையை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் மற்றும் கூட்டுறவு விதை, உர விற்பனை மையங்களில் இருப்பு மற்றும் விலை விவரங்கள் கொண்ட விலைப் பட்டியல் வைக்கவும், அதிகபட்ச சில்லறை விலையில் மட்டுமே விற்கப்படுவதை உறுதி செய்ய வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் வேளாண்மை, தோட்டக் கலை, வருவாய்த் துறை, வேளாண் விற்பனை மற்றும் விதை ஆய்வு துறை ஆகிய துறையினர் இடம் பெற்று ஆய்வு மேற்கொள்வர்.

சம்பா பருவத்துக்கான விதைகள் மற்றும் உரங்கள் தேவையான அளவில் கிடைக்கவும் வழி செய்யப்படும் என்றார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வமணி, வேளாண்மை இணை இயக்குநர் என். சுந்தர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கோ.

சுப்பிரமணியன், திருவள்ளூர் கோட்டாட்சியர் அபிராமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திருந்திய நெல் சாகுபடி விளக்கப் பயிற்சி முகாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த விளக்கப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அரண்வாயல் ஊராட்சியில் திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக லாபம் பெறுவது குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமில் வேளாண் உதவி இயக்குநர் எபிநேசன் தலைமை வகித்தார். வேளாண் உதவி அலுவலர்கள் திருந்திய நெல் சாகுபடி முறையில் வயல்களில் நடவு முறை குறித்து செயல் முறை விளக்கத்தை செய்து காட்டினர். தொடர்ந்து விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான்கள், மார்க்கர் கருவிகள் உள்ளிட்ட வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. வேளாண்மை உதவி அலுவலர் ராஜேஷ் நன்றி கூறினார்.

## மாவட்ட அளவில் விவசாயிகளுக்குப் பயிற்சி

திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் அம்மா திட்டத்தின் கீழ், திருந்திய நெல் சாகுபடி குறித்து, மாவட்ட அளவில் விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, வேளாண்மை இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை தலைமை வகித்தார். திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் நிர்மலாதேவி, துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருப்பரங்குன்றம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் எஸ். துரைக்கண்ணம்மாள் வரவேற்றார். துணை இயக்குநர் ராஜேந்திரன் திருந்திய நெல் சாகுபடியில் நீர் மறைய நீர்கட்டு என நீரின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

துணை இயக்குநர் வளர்மதி திருந்திய நெல் சாகுபடி முறையில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற புதிய தொழில்நுட்பங்களை விளக்கினார்.

பயிற்சியில், திருப்பரங்குன்றம், திருமங்கலம், கள்ளிக்குடி மற்றும் மதுரை கிழக்கு வட்டார விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.ஏற்பாடுகளை, வட்டார வேளாண்மை அலுவலர் இரா. பாண்டி, உதவி வேளாண்மை அலுவலர்கள் அழகேசன், ரவிச்சந்திரன், சந்திரசேகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர். துணை அலுவலர் ஆர். அம்பிகாபதி நன்றி கூறினார்.

## நிலக்கடலை விவசாயிகளுக்கு யோசனை

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை துறையினர் சில யோசனைகள் தெரிவித்துள்ளனர்.

சிங்கம்புணரி வட்டத்தில் நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் நிலத்தில் சிவப்பு கம்பளி புழு மற்றும் பச்சை புழுக்களின் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது.

இத்தாக்குதலை கட்டுப்படுத்த விளக்கு பொறி மற்றும் சொக்கப்பனை வைத்து கட்டுப்படுத்துவது, அரிசி, வெல்லம் மற்றும் மாலத்தியான் கலந்து சிறு உருண்டைகளாக வைத்தும், ப்ரனோபாஸ் 500 மில்லி அல்லது குளோரோபைரிபாஸ் 500 மில்லி மருந்தை ஏக்கருக்கு தெளித்தும் இப்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் எனவும் மேற்கூறிய அனைத்து மருந்துகளும் 50 சதவிகித மானியத்தில் சிங்கம்புணரி வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கும் எனவும், தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது எனவும் வேளாண்மை உதவி இயக்குநர் சர்புதீன் அகமது தெரிவித்துள்ளார்.

## 10 கிராமங்களில் "பட்டு விவசாயி' திட்டம்

சிவகங்கை மாவட்டத்தில் 10 கிராமங்களில் ஊராட்சிக்கு ஒரு விவசாயி என்ற அடிப்படையில் பட்டு விவசாயி திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம், விட்டனேரி கிராமத்தில்

இத்திட்டத்தின் கீழ் முருகன் என்ற விவசாயி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவருடைய நிலத்தில் பட்டுச்செடி வளர்ப்புப் பணியினை பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் வெ.பிரபாகரன், மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் பார்வையிட்டனர்.

தமிழகம் பட்டு உற்பத்தியில் தன்னிறைவை அடையும் வகையிலும், லாபகரமான பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வகையிலும் ஊராட்சிக்கு ஒரு பட்டு விவசாயி என்ற புதிய திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இதனடிப்படையில் பட்டுச்செடி சாகுபடிக்காக சிவகங்கை மாவட்டத்தில் 10 கிராமங்கள் தேர்வு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பட்டுப்புழு வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் வருமானம், வழங்கப்படும் மானியம் குறித்த பயிலரங்கம் வரும் செப்.29ஆம் தேதி புரசடிஉடைப்பு கிராமத்தில் நடத்தப்பட உள்ளது. இந்த பயிலரங்கில் மகளிர் சுயஉதவிக் குழுவினர், விவசாயிகள், பொதுமக்கள் கலந்து கொள்வதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

வரும் செப்.28 ஆம் தேதி தேர்வு செய்யப்பட்ட விவசாயிகள், கண்டு உணர்வு சுற்றுலா மூலம் திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகாவில் முன்னோடி விவசாயிகளிடம் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். அங்கு பட்டுச் செடி வளர்ப்பை பார்வையிடவும் விளக்கம், பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

இவ்வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பல்லடம் தாலூகா வியாபாரிகள் சங்கக் கூட்டம்

பல்லடம் தாலூகா வியாபாரிகள் சங்கக் கூட்டம் ஆனந்தா பி.செல்வராஜ் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், செயலாளர் விமல் பி.என்.பழனிசாமி, பொருளாளர் பி.பரமசிவம், ஒருங்கிணைப்பாளர் பி.ஜே.விஜயகுமார், கே.நாகராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், சங்கத்திற்கு புதிய உறுப்பினர்களைச் சேர்த்து சங்கத்தை வலுப்படுத்துவது, நன்கொடை கேட்டு வரும் வெளிநபர்கள் சங்கத்தை அணுக வேண்டும்.

வணிக நிறுவனங்களில் வியாபார நேரத்தில் இடையூறு செய்யும் திருநங்கைகளைக் காவல் துறையினர் கட்டுப்படுத்த வலியுறுத்தி போலீஸில் புகார் தெரிவிப்பது.

மாநில அளவில் நடைபெறும் கடையடைப்புகளுக்கு மட்டும் பல்லடம் சங்கம் ஆதரவு தெரிவித்து அதில் பங்கேற்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பவானிசாகர் அணை நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை 79.42 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,714 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,100 கன அடி நீரும், வாய்க்காலில் 2,500 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 15.38 டி.எம்.சி.

## மத்திய கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும்

வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி உடனடியாக குறுகிய காலக் கடன்களை வழங்க வேண்டும் என பாரதிய கிசான் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஏ.டி.பாபு நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட கரும்பு விவசாயிகளை இணைத்து உருவாக்கப்பட்டது திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை.

இந்த ஆலையின் சார்பில் பரிந்துரை செய்யப்படும் விவசாயிகளுக்கு அந்தந்த வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன.

இந்நிலையில், விவசாயிகளின் கிணறுகளை ஆழப்படுத்துதல் பணிக்காக கடன் வழங்குமாறு வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் கேட்டுக் கொண்டு கடிதம் அனுப்பியுள்ளது.

இருப்பினும், அரக்கோணம் பகுதியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் இந்த குறுகிய கால கடனை விவசாயிகளுக்கு தர மறுத்து வருகின்றன. இதனால் விவசாயிகள் தங்களது கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் வற்றிய நிலையில் மாறியதால் கரும்பு பயிருக்கு தண்ணீர் அளிக்க முடியாத நிலையில் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். இதனால் இந்த வட்டத்தில் உள்ள 2200 ஏக்கர் நிலம் பாதிக்கப்படும் சூழல் உள்ளது. திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வரும் 88 ஆயிரம் டன் கரும்புகளில் 25 சதவீதம் மட்டுமே வரும் எனும் சூழ்நிலை காணப்படுகிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கரும்பு பயிர்க்கடன் ரூ.5.5 கோடியை திரும்ப செலுத்த முடியாத நிலையும் உருவாகலாம்.எனவே, விவசாயிகளுக்கு குறுகிய கால கடனை உடனே வழங்க மத்திய கூட்டுறவு வங்கி முன்வர வேண்டும் என ஏ.டி.பாபு நாயுடு கூறியுள்ளார்.

## காய்கறிகள் விற்பனை அதிகரிப்பு

புரட்டாசி மாதம் தொடங்கியதை அடுத்து, நாமக்கல் மாவட்டத்தில் இறைச்சி விற்பனை குறைந்து காய்கறிகளின் விற்பனை அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் ஹிந்துக்கள் பெரும்பாலும் புரட்டாசி மாதத்தில் அசைவ உணவுகளை சாப்பிடுவதில்லை. இதனால், இந்த மாதத்தில் இறைச்சி விற்பனை சரிவது வழக்கம்.

இதன்படி, நிகழாண்டு புரட்டாசி மாதம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது முதலே நாமக்கல் மாவட்டத்தில் இறைச்சி விற்பனை சரிந்தது.

இதன் தொடர்ச்சியாக, இறைச்சிக் கடைகளில் ஞாயிற்றுக்கிழமை மக்கள் கூட்டம் வழக்கத்தை விட மிகவும் குறைவாக இருந்தது. அதேநேரம், உழவர் சந்தைக்கு வரும் மக்கள் எண்ணிக்கை சற்று கூடுதலாக இருந்தது. இதன்படி, நாமக்கல் உழவர் சந்தையில் வழக்கத்தை விட, சுமார் 5 டன் காய்கறிகள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டதாக, உழவர் சந்தை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது:

நாமக்கல் உழவர் சந்தைக்கு ஞாயிற்றுக்கிழ்மை 196 விவசாயிகள் 28,960 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். அதில், கத்தரி கிலோ ரூ.38, வெண்டை ரூ.20, பீர்க்கன் ரூ.16, புடலை ரூ.16, பாகற்காய் ரூ.20, கொத்தவரை ரூ.16, பச்சைமிளகாய் ரூ.28, முருங்கைக்காய் ரூ.28, கேரட் ரூ.38, பீட்ரூட் ரூ.16, பீன்ஸ் ரூ.30, முட்டைக் கோசு ரூ.26, பெரிய வெங்காயம் ரூ.54, சின்ன வெங்காயம் ரூ.30 முதல் ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்டன. இந்தக் காய்கறிகளை 5,850 நுகர்வோர் ரூ.5,96,800-க்கு வாங்கிச் சென்றனர்.

இதேபோல, சனிக்கிழமை 215 விவசாயிகள் 29,870 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இந்த காய்கறிகளை 6,150 பேர் ரூ.5,97,406-க்கு வாங்கிச் சென்றனர். இந்த காய்கறி விற்பனை வழக்கமான நாள்களைவிட மிக அதிகமாகும் என்றனர் அவர்கள்.

அதேசமயம், இறைச்சி விற்பனை சரிந்ததால், பல கடைகளில் கறிக்கோழி கிலோ ரூ.100-க்கு கீழ் விற்பனை செய்யப்பட்டன.

## மரவள்ளிக் கிழங்கு விலை வீழ்ச்சி

பரமத்தி வேலூர் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

எஸ்.வாழவந்தி, பெரியகரசபாளையம், செங்கப்பள்ளி, பரமத்தி, கூடச்சேரி, கபிலர்மலை, சின்னமருதூர், சோழசிராமணி, பெருங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது.இந்தப் பகுதிகளில் விளையும் மரவள்ளிக் கிழங்குகளை அந்தந்தப் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் வாங்கிச் சென்று புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, மலவேப்பங்கொட்டை, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கிழங்கு ஆலைகளுக்கு அனுப்பிவைப்பர். கிழங்கு ஆலையில் மரவள்ளி கிழங்கில் இருந்து ஜவ்வரிசி, கிழங்கு மாவு தயார் செய்யப்படுகிறது. மேலும், சிப்ஸ் தயார் செய்யவும் வியாபாரிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர்.மரவள்ளிக் கிழங்குகளை வாங்கும் ஆலை உரிமையாளர்கள் மரவள்ளிக் கிழங்கில் உள்ள சத்து மற்றும் புள்ளிகள் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்கின்றனர்.

கடந்த வாரம் ஒரு டன் மரவள்ளிக் கிழங்கு ஆலைகளுக்கு வெட்டப்படும் விலையில் டன் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்துக்கும், சிப்ஸ் தயார் செய்பவர்கள் டன் ஒன்று ரூ.13 ஆயிரம் வரை வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

இந்த வாரம் ஆலைகளுக்கு ரூ.10,500-க்கும், சிப்ஸ் தயார் செய்பவர்கள் டன் ஒன்று ரூ.11 ஆயிரத்துக்கும் வாங்கிச் சென்றனர்.

கொல்லிமலை உள்ளிட்ட பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். விலை வீழ்ச்சியால் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்ட விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

## கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.60 லட்சம் மஞ்சள் விற்பனை

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை ரூ.60 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

இந்தச் சங்கத்துக்கு சனிக்கிழமை சுமார் 1600 மஞ்சள் மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் ஏலம் எடுத்தனர்.

விரலி ரக மஞ்சல் குவிண்டாலுக்கு ரூ.5,900 முதல் ரூ.6,800 வரை விற்பனையானது.

கிழங்கு ரகம் ரூ.5,100 முதல் ரூ.5,900 வரை விற்பனையானது. பனங்காளி ரகம் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.8,800 வரை விற்பனையானது.

ஈரோடு சந்தையைக் காட்டிலும் 700 மஞ்சள் மூட்டைகள் அதிகம் வந்திருந்தன.

மஞ்சள் சந்தைகளைக் காட்டிலும் குவிண்டாலுக்கு ரூ. 60 முதல் ரூ.800 வரை அதிகம் விலை போனதாக சங்கத்தின் மேலாண் அலுவலர் லோகநாதன் தெரிவித்தார்.

## கறிக்கோழி கொள்முதல் விலை சரிவு

புரட்டாசி மாதம் தொடங்கியுள்ளதை அடுத்து, கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை சரிந்து வருகிறது. எனினும், முட்டைக்கோழி கொள்முதல் விலையில் போதிய மாற்றமின்றி நீடிக்கிறது.

அசைவ உணவுகளை உள்கொள்ளும் ஹிந்துக்கள் புரட்டாசி மாதத்தில் அந்த உணவைத் தவிர்ப்பர்.

நிகழாண்டில், புராட்டாசி மாதம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியதை அடுத்து, தமிழகத்தில் இறைச்சி விற்பனை வெகுவாகச் சரிந்தது. மேலும், கறிக்கோழிகளின் கொள்முதலும் பெருமளவில் சரிந்துள்ளதால், அதன் கொள்முதல் விலையும் குறைக்கப்பட்டு வருகிறது.

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு நிர்ணயிக்கும் விலைப் பட்டியல்படி ஆகஸ்ட் இறுதியில் கிலோ ரூ.81-க்கு விற்கப்பட்ட கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை புதன்கிழமை ரூ.58 ஆக சரிந்தது. தொடர்ந்து, வியாழக்கிழமை முதல் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.52-ஆகக் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

கறிக்கோழி கொள்முதல் விலை வேகமாகச் சரிந்த போதிலும், முட்டைக் கோழிகளின் கொள்முதல் விலையில் போதிய மாற்றமின்றி கிலோ ரூ.55 முதல் ரூ.57 என்ற அளவிலேயே நீடித்து வருகிறது.

இதுகுறித்து நாமக்கல் கறிக்கோழி விற்பனையாளர் சுப்பிரமணியம் கூறியது:

தமிழகத்தில் வளர்க்கப்படும் கறிக்கோழிகளுக்கு முக்கியச் சந்தையான கேரளத்தில் பேஸ் ரேட்டாக கிலோவுக்கு ரூ.95 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதைவிட விலை குறைந்தாலும் கிலோவுக்கு ரூ.95 என்ற விலை அடிப்படையில் 14.5 சதம் வரி செலுத்த வேண்டும்.

இதனால், வாரம் 5 லட்சம் கிலோ அனுப்பப்பட்டு வந்த கறிக்கோழிகள், தற்போது ஒரு லட்சம் கிலோவாக குறைந்துவிட்டது. மேலும், தமிழகத்தில் வழக்கமாக நடைபெறும் கறிக்கோழி விற்பனையிலும் புரட்டாசி மாதம் காரணமாக 20 சதம் சரிந்துள்ளது.

இதனால், தேக்கம் அதிகரித்து கறிக்கோழி கொள்முதல் விலை குறைக்கப்பட்டு வருகிறது. எனினும், ஹைதராபாத் சந்தை சிறப்பாக இருப்பதால், இதற்குமேல் கொள்முதல் விலை குறையவாய்ப்பில்லை என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

## பார்த்தீனியம் உரம் தயாரிக்க மாணவிகள் செயல்விளக்கம்

கிருஷ்ணகிரி அருகே பார்த்தீனியம் உரம் தயாரிப்பது குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

மூங்கில்புதூர் கிராமத்தில் சனிக்கிழமை பார்த்தீனியம் உரம் தயாரிப்பது குறித்து வேலூர் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் சித்ரா, ஆர்யலட்சுமி, சிவரஞ்சனி, சுகன்யா, ராமேஸ்வரி, இளவரசி ஆகியோர் அளித்த செயல் விளக்கம்: பார்த்தீனியம் என்பது ஒரு விஷ செடி. இது பெரும்பாலும் விவசாய நிலங்களிலும், சாலை ஓரங்களிலும், பள்ளிகளைச் சுற்றியுள்ள இடங்களிலும் காணப்படும். இந்தச் செடிகளால் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பல்வேறு தீங்குகள் ஏற்படுகின்றன.

இந்தச் செடியை உரமாக மாற்றிப் பயன்படுத்துவதன் மூலம் உரத் தேவையைக் குறைத்து, மகசூலை அதிகரிக்கலாம் என்று,அந்த மாணவிகள் விளக்கினர்.

காற்றோட்டம் நிறைந்த நிழல்பாங்கான இடத்தில் 10 அடி நீளம், 6 அடி அகலம், 3 அடி ஆழம் கொண்ட பாத்தி அமைத்து, 50 கிலோ பார்த்தீனியம் களைச் செடிகளைப் பரப்பி, அதன் மேல் 500 கிராம் யூரியா அல்லது 3 கிலோ ராக் பாஸ்பேட் கரைசலைத் தெளிக்க வேண்டும். 50 கிராம் டிரைகோடெர்மா விரிடி என்ற உயிர் உரத்தை தூவ வேண்டும். இது ஓர் அடுக்காகும். இதேபோல, நான்கு அடுக்குகள் அமைக்க வேண்டும்.

இந்த அடுக்குகள் நிலத்திலிருந்து ஓரடி உயரம் வரை வந்த பிறகு தவிடு, மண், பசுஞ்சாணம் ஆகியவற்றைக் கலவையாகத் தயார் செய்து மூட வேண்டும். நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்குப் பிறகு இதைச் சலித்து உரமாகப் பயன்படுத்தலாம். இந்த பார்த்தீனியம் உரத்தில் 1.05 சதம் தழைச்சத்து, 0.84 சத மணிச்சத்து, 1.11 சதம் சாம்பல் சத்து, 0.55 சதம் மக்னீசியம் மற்றும் 0.90 சதம் சுண்ணாம்பு சத்து உள்ளன. 100 கிலோ பார்த்தீனியம் செடியில் இருந்து 45 கிலோ உரம் தயாரிக்கலாம் என்பதை செயல் விளக்கத்துடன் மாணவிகள் விவசாயிகளுக்கு விளக்கினர்.

## கத்தரியில் காய்ப் புழுவை கட்டுப்படுத்த செயல் விளக்கம்

கிருஷ்ணகிரி அருகே இனக் கவர்ச்சிப் பொறி மூலம் கத்தரியில் காய்ப் புழு மற்றும் தண்டுப்புழுவைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

கிருஷ்ணகிரி அடுத்த போகனப்பள்ளி கிராமத்தில் வேலூர் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் கலைச்செல்வி, செப்தாமணி, சுபித்ரா, ஹனி, காவியஅபிநயா, அஞ்சனா, செப்மியா ஆகியோர் கொண்ட குழுவினர் முகாமிட்டு, சுற்றுப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணகிரி அடுத்த கள்ளியூரில் வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின்கீழ், இனக் கவர்ச்சிப் பொறி மூலம் கத்தரியில் காய்ப் புழு மற்றும் தண்டுப் புழுவைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு அந்த மாணவிகள் செயல் விளக்கத்துடன் விளக்கினர்.

## உற்பத்தி குறைந்ததால் பாக்கு விலை உயர்வுபி.ஏ.ராஜசேகரன்

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி பகுதியில் விளையும் பாக்குகள் கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு லாரிகளில் வாரந்தோறும் அனுப்பப்படுகின்றன.

தம்மம்பட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளான செந்தாரப்பட்டி, கூடமலை, கொண்டயம்பள்ளி, வாழக்கோம்பை, பனந்தோப்பு, உலிபுரம், நாகியம்பட்டி, நாரைக்கிணறு, மெட்டாலா, மண்மலை, செங்கக்கட்டு, செங்காடு, ஜங்கமசமுத்திரம், கெங்கவல்லி, வீரகனூர், மஞ்சினி உள்ளிட்ட ஊர்களில் பாக்குமரத் தோப்புகள் சுமார் 400 ஏக்கர்களில் உள்ளன. ஓர் ஏக்கருக்கு சுமார் 700 மரங்கள் வீதம், சுமார் 30 ஆயிரம் பாக்கு மரங்கள் உள்ளன.

தற்போது, பாக்கு அறுவடை சீசன் தொடங்கியுள்ளது. அறுவடை தொடர்ந்து 5 மாதங்கள் நடைபெறும். கடந்த ஒன்றரை வருடமாக சரியான அளவில் மழை பெய்யாததால், மொத்தமுள்ள 400 ஏக்கர்களில் சுமார் 100 ஏக்கர்களில் பயிரிடப்பட்ட பாக்குமரங்கள் காய்ந்து போய்விட்டன. சென்ற வருடத்தில் ஒரு பாக்குமரம் ரூ.90-க்கு வருட குத்தகைக்கு விடப்பட்டது.

கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் மழையால், பாக்கு உள்ளிட்ட விவசாயம் செழிக்கத் தொடங்கியது. அதனால், நிகழாண்டு குத்தகைத் தொகை மரம் ஒன்றுக்கு ரூ.150 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து பாக்கு வியாபாரிகள் முருகேசன், பாலமுருகன் ஆகியோர் கூறியது:

கடந்த ஆண்டு முழுவதும் மழை இல்லாததால், ஏராளமான பாக்கு மரங்களில் பாக்குக் குலைகள் உற்பத்தி குறைந்துள்ளது. பாக்கு மரங்களிலிருந்து குலையாக வெட்டப்படும் முழுப் பாக்குகள் தோல் உரிக்கப்படும். பின்னர் அவை வேகவைத்து, காப்பி வண்ண சாயமேற்றி 5 நாள்கள் காய வைக்கப்படும். இதை ஆப்பி என்று அழைக்கின்றனர். ஆப்பியானது பான் மசாலா, பான்பராக் போன்றவற்றின் உற்பத்திக்காக அனுப்பப்படுகிறது.

வேக வைத்து காயவைக்கப்படும் ஆப்பி வகை பாக்கு கடந்த ஆண்டு கிலோ ரூ.100-க்கு விலைபோனது. தற்போது ரூ.170-க்கு விற்பனையாகிறது. பதப்படுத்தப்பட்ட ஆப்பி வகை பாக்கை சுமார் ஓராண்டு வரை இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

ஒரு மூட்டை ஆப்பி என்பது 80 கிலோ எடை கொண்டதாகும். ஒரு கிலோ ஆப்பி ரூ.170 ரூபாய் வீதம், ஒரு மூட்டை ஆப்பி வகை பாக்கு ரூ. 13 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

தற்போது, இந்தப் பகுதிகளில் விளையும் பாக்குகளை நேரிடையாக ஆந்திரம், கர்நாடகத்துக்கு அனுப்பி வருகிறோம். ஆனால், தற்போது வாழப்பாடியில் பாக்கு கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கொள்முதல் நிலையம் மூலம் அனுப்பப்படும் பாக்குகளுக்கு, வரி விதிக்கப்படுகிறது.

இந்த வரி விதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். சந்தையில், கமிஷனாக கிலோவுக்கு பத்து ரூபாயை எடுத்துக் காள்கின்றனர். இவற்றை எல்லாம் கணக்கிட்டுத்தான் தோப்புகளில் கொள்முதல் செய்யும் போது விலை பேச வேண்டியுள்ளது. தற்போது மழை தொடங்கிவிட்டதால், அடுத்த ஆண்டு மகசூல் அதிகரிக்கும் என்றனர் அவர்கள்.

## தம்மம்பட்டியில் காளான் விற்பனை அதிகரிப்பு

சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை காளான் விற்பனை விறு விறுப்பாக நடைபெற்றது.

புரட்டாசி பெருமாளுக்கு உகந்த மாதம் என்பதால், சனிக்கிழமைகள் மட்டுமின்றி மாதம் முழுவதும் பலர் விரதம் இருக்கின்றனர். இதனால், அசைவம் சாப்பிட்டுவதை விட்டுவிட்டு பலர் சைவத்துக்கு மாறியுள்ளனர்.

வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் இறைச்சிக் கடைகளில் அதிக அளவில் கூட்டம் காணப்படும், இந்த நிலையில், புரட்டாசி விரதம் தொடங்கியுள்ளதால்,ஞாயிற்றுக்கிழமை தம்மம்பட்டியில் உள்ள இறைச்சிக்கடைகள் கூட்டமில்லாமல் வெறிச்சோடி காணப்பட்டன. இதில், பல இறைச்சிக் கடைகள் மூடப்பட்டிருந்தன.

இந்தநிலையில், தம்மம்பட்டிக்கு ஊட்டியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை ஊட்டியில் இருந்து கொண்டு வரப்பட்ட பட்டன் காளான்கள் காய்கறிக்கடைகள், பேக்கரிகள், பால்கடைகளில் ரூ. 45 வீதம் 400 பாக்கெட்டுகள் ஒரு மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தது.

இதுகுறித்து காய்கறிக் கடைக்காரர்கள் கூறியது, புரட்டாசி மாதத்தில் மட்டுமே காளான் அதிக அளவில் விற்பனை நடைபெறும். அதற்கு பிறகு, காளான் விற்பனை அடியோடு குறைந்துவிடும் என்றனர்.

## விவரங்கள் குறிப்பிடப்படாத வெளி மாநில விதைகளுக்குத் தடை

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் தேவையான விவரங்கள் குறிப்பிடப்படாமல் வெளி மாநில விதைகளை விற்பனை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சேலம் விதை ஆய்வு துணை இயக்குநர் ப.செப்ந்தரராஜன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உரிமம் பெற்று விதை விற்பனை செய்து வரும் விதை விற்பனையாளர்கள், தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட பல்வேறு பயிர்களின் ரகங்கள், வீரிய ஒட்டு விதைகளை விற்பனை செய்து வருவதுடன், வெளி மாநிலங்களில் உற்பத்தியாகி தமிழகத்துக்கு வரும் விதைகளையும் விற்பனை செய்கின்றனர்.

அவ்வாறு, வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யும் விதைகளின் ஒவ்வொரு குவியலுக்கும் விதைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, படிவம் 2-உடன் கொள்முதல் பட்டியல் கட்டாயம் பெறப்பட வேண்டும். படிவம் என்பது அந்த மாநிலத்தின் விதைச் சான்று அலுவலரால் பிற மாநிலங்களுக்கு கொண்டுச் செல்ல அனுமதிக்கப்படும் சான்றாகும்.

எனவே, படிவம் 2 இல்லாமல் வெளி மாநில விதைகள் கொள்முதல் செய்யப்பட்டிருந்தால் அவற்றை விற்பனைச் செய்யத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும். மேலும், வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படும் விதைக் குவியல்களின் குவியல் எண்ணும், கொள்முதல் பட்டியலில் குறிப்பிட்டுள்ள குவியல் எண்ணும் ஒன்றாக இருக்க வேண்டும். குவியல் எண் மாறி வரப் பெற்றால் அந்த விதைகளை விற்கத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும்.

வெளி மாநில விதைகள், சான்று விதைகளாக இருந்தால் உற்பத்தியாளர் அட்டை, சான்று அட்டை ஒவ்வொரு மூட்டையிலும் தையலிடப்பட்டு, ஈயக்குண்டு கோர்க்கப்பட்டு, குண்டில் முத்திரை பதிக்கப்பட்டிருக்க வேண்டும். இவை இல்லாமல் இருந்தாலோ அல்லது கிழிக்கப்பட்டிருந்தாலோ அந்த விதைகள் விற்பனைக்கு அனுமதிக்கப் படமாட்டாது. முத்திரை இல்லாமல் இருந்தால் அந்த விதை விற்பனைக்குத் தடை விதிக்கப்படும்.

வெளி மாநில விதைகளின் உண்மை நிலை, விதைகளில் விவர அட்டை விதைச் சட்டத்தின்படி, வெளிர் பச்சை நிறத்தில் விதைச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அளவில் இருக்க வேண்டும். விவர அட்டையில் பயிர், ரகம், நிலை, குவியல் எண், அளவு, ஆய்வு செய்த தேதி, காலாவதி நாள், உற்பத்தியாளர் விவரம் ஆகியவை முழுமையாக

குறிப்பிட்டிருக்க வேண்டும். விவர அட்டையில் தேவையற்ற, தவறான விவரங்கள் இருக்கக் கூடாது.

மேற்கண்டுள்ள குறைகள் இல்லாமல் விதைச் சட்ட வழிமுறைகளின்படி, வெளி மாநில விதைகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும். குறைபாடுகளுடன் சட்டத்துக்குப் புறம்பாக விற்பனை செய்யும் விதை விற்பனையாளர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

## செப். 27-ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் செப். 27-ம் தேதி காலை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் மேலும் தெரிவித்திருப்பது: கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை தெரிவிக்கலாம். கருத்துகளை தெரிவிக்க விரும்புபவர்கள் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை செப். 27-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல் இருவர் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

## செப். 24, 25-ல் விவசாய தொழிலாளர் சங்கக் கூட்டம்

தஞ்சாவூரில் இந்திய விவசாய தொழிலாளர் சங்க நிறுவனர் தலைவர் ராஜேஸ்வர ராவ் பிறந்த நூற்றாண்டு விழா, இந்திய விவசாய தொழிலாளர் சங்கப் பொதுக் குழுக் கூட்டம் செப். 24, 25-ம் தேதிகளில் நடைபெறவுள்ளது.

தஞ்சாவூரில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலர்கள் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்திய விவசாய தொழிலாளர் சங்க நிறுவனர் தலைவரும், விடுதலை போராட்ட வீரருமான ராஜேஸ்வர ராவ் பிறந்த நூற்றாண்டு விழா மற்றும் இந்திய விவசாய தொழிலாளர் சங்கப் பொதுக் குழுக் கூட்டம், தஞ்சாவூரில் செப். 24, 25-ம் தேதிகளில் நடத்துவது. குடிமனை பட்டா, வீடு, நிலம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நூற்றாண்டு விழாவை நடத்துவது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கொசு வழியாக நோய் பரவுவது முக்கிய காரணமாகக் கருதப்படுவதால், ஏழை மக்களுக்கு இலவச கொசு வலை வழங்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத் தொழிலாளர்களுக்கு ரூ. 148-க்கு குறையாமல் ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்கத்தின் மாநிலத் தலைவர் கே. தங்கமணி தலைமை வகித்தார். பொதுச் செயலர் இரா. முத்தரசன், செயலர்கள் நா. பெரியசாமி, ஆர். ஞானமோகன், நா. சாத்தையா, துணைத் தலைவர்கள் வி. பொன்னுபாண்டியன், பி. பத்மாவதி, வி.பி. பழனிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை

பெரம்பலூர் மாவட்டத்தில் கூடுதல் விலைக்கு உரம் விற்போர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் வேளாண் துறை இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், தனியார் உரக்கடைகளில் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

பெரம்பலூர் மாவட்டத்தில் இயங்கிவரும் 52 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் யூரியா 750 டன், டி.ஏ.பி 1,000 டன், பொட்டாஷ் 600 டன், கூட்டு உரங்கள் 1,500 டன், தனியார் கடைகளில் யூரியா 2,000 டன், டி.ஏ.பி 500 டன், பொட்டாஷ் 400 டன், கூட்டு உரங்கள் 1,600 டன்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

எனவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் கடைகளிலும் உரிய விலைக்கு வாங்கிப் பயன் பெறலாம். விவசாயிகள் வாங்கும் உரத்துக்கு ரசீது பெறுவதோடு, உர மூட்டைகளின் மீது அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் வாங்க வேண்டும்.

உர விற்பனை குறித்து புகார் அளிக்க விரும்புவோர் பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநரை 9047072743, வேளாண் அலுவலரை (தரக் கட்டுப்பாடு) 9047072756, பெரம்பலூர் வட்டார வேளாண் அலுவலரை 8144916148, ஆலத்தூர் வட்டார வேளாண் அலுவலரை 8608388197, வேப்பூர் வட்டார வேளாண் அலுவலரை 9843852444, வேப்பந்தட்டை வட்டார வேளாண் அலுவலரை 9443590920 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

உரம் வாங்கும்போது ரசீது தராமல், மூட்டை மீதுள்ள விலைக்கு மேல் கூடுதலாக விலை வைத்து விற்கும் விற்பனையாளர்கள் மீது உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வறட்சி நிவாரணம் ரூ. 8.50 கோடி வேளாண் துறையிடம் வழங்கல்

காரைக்கால் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 8.50 கோடி வறட்சி நிவாரணம் வேளாண் துறையிடம், வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு சனிக்கிழமை வழங்கினார்.

திங்கள்கிழமை (செப். 23) முதல் விவசாயிகள் தங்களது வங்கிக் கணக்கில் இதனை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்டத்தல் கடந்த 2012-ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் குறுவை, சம்பா பயிர் பாதிப்பு ஏற்பட்டது. புதுச்சேரி அரசு கடந்த 6 மாதத்துக்கு முன்பு, காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படுமென அறிவித்தது.

இதற்கான தொகையை ஒதுக்கீடு செய்வதில் புதுச்சேரி அரசுக்கு சிரமம் நிலவியது.

இந்நிலையில், மத்தியக் குழுவினர் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு காரைக்காலில் விளைநிலப் பகுதியை பார்வையிட்டுச் சென்றனர். விவசாயிகளுக்கு உரிய நிவாணத்துக்கான நிதி ரூ. 8.50 கோடிக்கான காசோலையை வேளாண் துறை அமைச்சர் மு. சந்திரகாசு, காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகனிடம் சனிக்கிழமை வழங்கினார்.

காரைக்காலில் பொது விவசாயிகள் 3735 பேருக்கு 3865 ஹெக்டேர் பரப்புக்கும், தாழ்த்தப்பட்ட விவசாயிகள் 685 பேருக்கு 387 ஹெக்டேர் பரப்புக்கும் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சட்டப்பேரவை உறுப்பினரும், புதுச்சேரி மின்திறல் குழுமத் தலைவருமான பி.ஆர். சிவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தண்டில் குலைதள்ளிய அதிசய வாழை மரம்!

சிதம்பரத்தில் ஒருவரது வீட்டுத் தோட்டத்தில் வாழை மரம் அதன் தண்டுப் பகுதியில் குலை தள்ளியுள்ளது.

சிதம்பரம் அருகேயுள்ள விபீஷணபுரம் வீரானார் கோயில் தெருவில் வசிப்பவர் என்.ரங்கநாதன். மின் பொருள் நிறுவனம் நடத்தி வரும் இவர், தனது வீட்டுத் தோட்டத்தில் வாழை மரங்கள் வளர்த்து வருகிறார்.

அதில் உள்ள ஒரு வாழை மரத்தில் அதிசயமாக மரத்தின் மத்தியில் குலை தள்ளி வாழைக்காய் மற்றும் வாழைப்பூ பூத்துள்ளது. இந்த அதிசயத்தை அக்கம், பக்கத்தில் உள்ளவர்கள்

பார்த்துச் செல்கின்றனர்.

## விவசாயிகளுக்கு இயந்திர நடவு குறித்த செயல்விளக்கம்

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், விவசாயிகளுக்கு இயந்திர நடவு குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டு, அதன் பயன்கள் குறித்தும் கூறப்பட்டது.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், கோட்டுச்சேரி பகுதி வரிச்சிக்குடி கொன்னக்காவலி கிராமத்தில் விவசாயி சுப்ராயன் என்பவரது வயலில், இயந்திர நடவு குறித்து அப்பகுதி விவசாயிகளுக்கு செயல்விளக்கம் ஞாயிற்றுக்கிழமை அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஆ. சுரேஷ் முன்னிலை வகித்து, விவசாயிகளிடையே அவர் பேசியது:

காரைக்கால் பகுதியில் காவிரித் தண்ணீர் வந்து விவசாயிகள் தற்போது விதைவிட்டுள்ளனர். சில பகுதிகளில் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தத் தருணத்தில் விவசாயிகள் இயந்திர நடவு செய்ய ஆர்வம் செலுத்த வேண்டும். வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில், ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் குறைந்த கட்டணத்தில் நடவுப் பணிக்கு இயந்திரம் அளிக்கப்படுகிறது.

இயந்திர நடவின் மூலம் தேவையான பயிர் இடைவெளி, சேதமின்மை, தொழிலாளர் பற்றாக்குறை, கூலி உயர்வினால்

இழப்பை சந்திப்பதை

விவசாயிகள் தவிர்க்க முடியும். இயந்திர நடவின் மூலம் கிடைக்கும் பயன்கள் குறித்து வேளாண் துறையினர் பல்வேறு வகையில் விளக்கங்களை அளித்து வருகின்றனர். இதனை பயன்படுத்தி சாகுபடி செலவை குறைத்து நன்மை அடைய வேண்டும் என்றார்.

விவசாயிகள் பலர் கலந்துகொண்டு, வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகளிடம் கூடுதல் விவரங்களை கேட்டறிந்து கொண்டனர்.

## காரைக்கால் விவசாயிகளுக்கு நாளை வறட்சி நிவாரணம்

காரைக்கால் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கும் பணி திங்கள்கிழமை நடைபெறும் என வேளாண் துறை அமைச்சர் சந்திரகாசு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

காரைக்கால் பகுதியில் கடந்த 2012-13 வறட்சி காரணமாக சம்பா தாளடி நெல் சாகுபடி பொய்த்து விட்டது. காரைக்காலில் உள்ள விவசாய நிலங்களையும், பயிர்களையும், முதல்வர் ரங்கசாமியின் உத்தரவின்படி பார்வையிட்டோம். அனைத்துப் பகுதி விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தோம். விவசாயிகள் நலன் கருதி ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

பொது விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.7.73 கோடியும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ரூ.77.48 லட்சம் என மொத்தம் ரூ.8.55 கோடி நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

வரும் திங்கள்கிழமை வேளாண் துறை அமைச்சர் மற்றும் அனைத்து எம்.எல்.ஏக்களும் வறட்சி நிவாரணத் தொகையை வழங்குவர் என்றார் சந்திரகாசு.

தினமலர்

## கென்யாவின் கடும் போட்டியால் தேயிலை ஏற்றுமதி...20 சதவீதம் சரிவடையு

நடப்பு, 2013-14ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல்செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் @தயிலை ஏற்றுமதி, கடந்த நிதி ஆண்டின் இ@த காலத்தை விட, 15-20 சதவீதம் சரிவடையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில், கென்யாவில் @தயிலை உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது . சர்வதேசந்தையில், நம்நாட்டிற்கு கடும் @பாட்டியாக கென்யா உருவெடுத்துள்ளது . இந்நிலையில், மத்திய அரசின், ஏற்றுமதிக்கான தர கட்டுப்பாடுகளாலும், தேயிலை ஏற்றுமதி பாதிப்புக்குள்ளாகும் என, இந்திய தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் செயலர் சேத்தன்
பட்@டல் தெரிவித்தார்கென்யா., சர்வதேசசந்தைக்கு குறைந்த விலையில் தேயிலை ஏற்றுமதி செய்து, நம் வாடிக்கை நாடுகளை ஆக்கிரமித்து வருகிறதுகென்யாவின் . போட்டியை எதிர்கொள்ளும் வகையில், மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள @வண்டும்ஏற்றுமதிக்கான தேயிலைக்கு., மத்திய அரசு, 20 வகையான தரக் குறியீடுகளை நிர்ணயித்துள்ளனமேற்கண்ட அனைத்து தர நிர்ணயங்களையும் ., கவனித்து ஏற்றுமதி செய்வது என்பது, இயலாத செயலாக உள்ளது. @தயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் பல நிறுவனங்கள், @மற்கண்ட தர

நிர்ணயத்தால், மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. கென்யாவின் போட்டியால், இந்திய ஏற்றுமதியாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ள நிலையில், தர நிர்ணயம் என்ற காரணிகளால், நாட்டின் தேயிலை ஏற்றுமதி துறை மிகவும் பாதிப்படைந்துள்ளது என, சேத்தன் பட்டேல் மேலும் கூறினார். இந்தியா சராசரியாக, ஆண்டுக்கு, 21-21.50 கோடி கிலோதேயிலையை ஏற்றுமதி செய்து வருகிறது கடந்த .2011-12ம் நிதியாண்டில், நாட்டின் தேயிலை ஏற்றுமதி, 21.44 கோடி கிலோவாக இருந்ததுஇது ., சென்ற 2012-13ம் நிதியாண்டில், 60 லட்ாம் கிலோ அதிகரித்து, 22.05 கோடி கி@லாவாக உயர்ந்ததுஏற்றுமதி குறைந்துள்ளதால்., உள்நாட்டு சந்தையில், @தயிலையின் விலை குறையத் துவங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டின் இரண்டாவது அரைஆண்டிலும், தேயிலை ஏற்றுமதி குறையும் நிலையில், உள்நாட்டில், தேயிலை அளிப்பு மேலும் அதிகரிக்கும்இதனால் ., உள்நாட்டில், இதன் விலை மேலும் சரிவடையும் என, வர்த்தகர்கள் தெரிவித்தனர். இருப்பினும், நடப்பு நிதியாண்டின் பிற்பகுதியில் இருந்து, தேயிலை ஏற்றுமதி, அதிகரிக்கும் என, மெக்லியட் ரசல் இந்தியா நிறுவனத்தின் இயக்குனர், அஸம் மேசகனம் தெரிவித்தார் கடந்த.2012ம் ஆண்டில், நாட்டின் தேயிலை உற்பத்தி, 112.60 @காடி கி@லாவாக இருந்தது .2 கோடி கிலோதேயிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது . அவ்வாண்டில், உள்நாட்டில் தேயிலை பயன்பாடு, 89.50 கோடி கிலோவாகவும், ஏற்றுமதி, 20.10 கோடி கிலோவாகவும் இருந்ததுபிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் -. இணைந்து

## பண்ணைப் பள்ளி பயிற்சி அட்மா திட்டம் ஏற்பாடு

ராசிபுரம்ராசிபுரம் அடுத்த வெண்ணந்தூர் யூனியன் :, நாச்சிப்பட்டி கிராமத்தில், விவசாயி சீனிவாசன் என்பவர் பருத்தி வயலில், அட்மா திட்டத்தின் கீழ், பருத்தி பயிரில் பண்ணைப்பள்ளி முகாம் நடந்தது.

வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன் வரவேற்றார்நாமக்கல் வேளாண் அறிவியல் . நிலைய உழவியல் நிபுணர் அழகுதுரை, பருத்தி பயிரில் கடைபிடிக்க வேண்டிய புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்வேளாண் அலுவலர் வசுமதி ., மண் பரிசோதனை அவசியம் மற்றும் மண் மாதிரி எடுத்தல் பற்றியும், துணை வேளாண்

அலுவலர் பசுபதி, வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தனர்வேளாண் உதவி அலுவலர்கள் ஆரோக்கியசாமி ., அந்தோணிசாமி சக்திவேல், கருப்புசாமி மற்றும் மேகலா ஆகியோர், செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்பருத்தி சாகுபடியில் வெற்றி பெற்ற விவசாயி சீனிவாசன் ., தனது விவசாய யுக்திகளை கூறினார்.

ஏற்பாடுகளை, அட்மா அலுவலர்கள் ரமேஷ், ஜமுனா ராணி ஆகியோர் செய்திருந்தனர்.

### மரம், மூலிகை வளர்ப்போர் சங்க ஆலோசனை கூட்டம்

நாமக்கல் மாவட்ட மரம் :மற்றும் மூலிகை வளர்ப்போர் சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், நாமக்கல்லில் நடந்தது.சங்க நிறுவனர் சத்தியமூர்த்தி தலைமை வகித்தார் . உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பது" .செயலாளர் தில்லை சிவக்குமார் வரவேற்றார்' என்ற தலைப்பில், "மாஜி' வேளாண் இணை இயக்குனர் துரை, "மதிப்பு கூட்டிய பொருள் தயாரிப்பு மற்றும் விற்பனை' என்ற தலைப்பில், புதுக்கோட்டை மாஜி"' வேளாண் இணை இயக்குனர் அங்குராஜ், "நோனி தாவரம்' குறித்து, புதுக்கோட்டை முன்னோடி விவசாயி கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.கூட்டத்தில், மரம் வளர்ப்பு மற்றும் வேளாண் பணியில் ஈடுபட்டு சிறப்பாக செயல்படும் விவசாயிகள், முத்துராஜ், புவணன், குமாரவேல் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்முன்னோடி விவசாயி சேதராமன் ., சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்

### துவரை செயல் விளக்கத் திடல்கள் அமைக்க ரூ.7,500 மானியம் வழங்கல்

மோகனூர்தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்" :, துவரை செயல்விளக்கத்திடல் அமைக்க, ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

மோகனூர் வட்டாரத்தில், பயறு வகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், வேளாண் துறை சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், துவரை சாகுபடி செயல்விளக்கத்திடல்கள் அமைக்க, ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள், மானியத்தில், முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, ஊக்கத்தொகையாக, ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மானியம், முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறதுபயறு . வகை பயிர்களான துவரை அதிகளவில் சாகுபடி செய்ய, வேளாண் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.விவசாயிகள், பெரும்பாலும் சாகுபடி செய்து வருகின்றனர்போதிய உரமிடாமலும் ., சாகுபடி செய்வதால், பருப்பு உற்பத்தி குறைந்து, பருப்பின் விலை வெளிச்சந்தையில் அதிகரித்துள்ளதுஎனவே ., விவசாயிகள் பயறு வகை பயிர்களையும் மற்ற பயிர்களைபோல் தோட்டக்கால் நிலங்களில் வளம் நிறைந்த மண்ணில் தனிப்பயிராக சாகுபடி செய்தால், குறைந்த காலத்தில், கூடுதல் மகசூல் பெறலாம்.

அதன்படி, மோகனூர் வட்டாரத்தில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், துவரை தனிப்பயிராக செயல்விளக்கத்திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள், மானிய விலையில், முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.மேலும், துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, பணி முடிவு மானியமாக, 7,500 ரூபாய், முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறதுஎனவே ., துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள், மோகனூர் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, உரிய விபரமும், முன் பதிவும் செய்து பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 2,000 மூட்டை மஞ்சள் ரூ.80 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்ஆத்தூர் :, புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 2,000 மூட்டை மஞ்சள், 80 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 600 விவசாயிகள், 2,000 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,589 ரூபாய்க்கும், அதிகபட்சம், 7,014 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,489 ரூபாய்க்கும்,

அதிகபட்சம், 5,509 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 8,889 ரூபாய்க்கும், அதிகபட்சம், 12,779 ரூபாய்க்கும் விற்பனையானது. ஏலத்தில், 15க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு, 2,000 மூட்டை மஞ்சளை, 80 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

## ரோஜா செடிகள் விற்பனை ஜோர்"'

விழுப்புரம்மாவட்டத்தில் பருவமழை பெய்ய துவங்கியுள்ளதால்:, ரோஜா செடிகள் விற்பனை அதிகரித்துள்ளது.விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பருவமழை பெய்து வருகிறது.வரும் அக் தொடர்ந்து ., முதல் வட கிழக்கு பருவமழை துவங்கவுள்ளது . .துளஇதனால் பூச்செடிகள் விற்பனை அதிகரித்துள்இரு சக்கர வாகனங்கள் மற்றும் பொது மக்கள் வந்து செல்லும் இடங்களிலும், பூச்செடிகள் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

விழுப்புரம் அரசு மருத்துவமனை எதிரே ஓசூரிலிருந்து கொண்டு வரப்பட்ட ரோஜா செடிகள் விற்பனை செய்யப்படுகின்றனஇங்கு சாமாந்தி ., அரளி, செம்பருத்தி, சாதா ரோஸ், பட்டன் ரோஸ் உள்ளிட்ட பல்வேறு வகையான பூச்செடிகள் விற்கப்படுகிறது. ஒவ்வொரு செடியும் 20 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

## மழையால் உற்று நடும் பணி தீவிரம்சாகம் நாற்

காஞ்தியில் பெய்த மழையால்புரம் சுற்று பகுசிகாஞ்:புரம்சி, விவசாகம் யிகள் உற்சா .துள்அடைந்காஞ் தியில் மழைபுரம் பகுசிபெய்து வருஇதை அடுத்து .றதுகி, விப்பேடு, நரப்பாக்கம், விசார், பெரும்யிகள்சாபாக்கம் விவ, நாற்று நடும் பணியைத் துவங்கி உள்-.ளபாலாற்றில் அளததால்மாக மணல் எடுத்கவுக்கு அதி, ஆற்று படுகளில் றுகையில் கிண குறாக்தண்ணீர் பற் .ததுநீர் மட்டம் குறைந்றையால், பயிர்கள் கருயிகள் சாவிவ .யதுகி மாக மழைம் விதலையை மாற்றுநிஇந் .டதுபட்லுக்கு செல்லும் நிலை ஏற்வேறு தொழி வதுவரு பெய்து, விவ.ளதுடுத்தி உள்பசியை ஏற்டையே மகிழ்ச்ளிகயிசா விஷார் கிராம விவகையில்ரசன் கூறுபசாயி அன், "விஷார் ஏரிக்கு, பாலாற்று தண்ணீர் வந்து, 20 வருயிகள்சாலான விவபாபெரும் .டதுவிட்திற்கு மேல் ஆகிடத், கிணற்று நீரையே நம்பி விவ.கிறோம்சாயம் செய்து வரு கடந்த ஆண்டு சரிததால்லாயான மழை இல், கிணற்றில் தண்ணீர் வற்ஒரு .டதுவிட்றி

இ .பட்டோம்டப்யவே கஷ்சாயம் செய்போகம் விவந்த ஆண்டு நல்ல மழை பெய்-தற்வ கையில்பிக்எனவே நம் .ளதுடுள்பட்கான வாய்ப்பு ஏற், நடவு செய்ய ஆரம்துள்ளோம்பித்," என்றார்.

## காட்ளுக்கு பயிற்சிகயிசாகத்தில் விவபாக்டுப்

கூடுவியல் மையத்தில்பாக்கம் வேளாண்மை அறிடுப்காட்:சேரிவாஞ், விவ ளுக்குகயிசா பயிற்சி அளிக்படுகிறதுகப், என, வேளாண்மை அறிரவேல் வியல் மைய தலைவர் கும .வித்தார்தெரிஅவமாறுரது அறிக்கை வரு,காட்ளத்தூர் அடுத்தகொடாங், காட்-பாக்டுப் கத்தில் உள்ள,வேளாண்மை அறியத்தில்விய நிலை, விவ-ண்ட பயிற்களுக்கு கீழ்கயிசா ளதபெற உள்சிகள் நடைுஇதில் ., அக் டோபர்3ம் தேதி, காளான் வளர்ப்பு, 4ம் தேதி,பழத்தோட்ட மேலாண்மை, 8 மற்றும் 9ம் தேதியில், தீவிர முறையில் வெள்ளாடு வளர்ப்பு, 10ம் தேதி,மதிப்ருட்கள்பொபட்ட பால்டப்பூட், 17மற்றும் 18ம் தேதி, நீடித்த நிலைபங்கள்நுட்படி தொழில்யான கரும்பு சாகு, 18ம் தேதி, அசோலா உற்-பத்தி தொழில் பாடுகளின் பயன்னுயிர் உரங்கள் மற்றும் நுண்பநுட், 29ம் தேதி, நன்னீர் மீன் வளர்ப்பு ஆகிய பயிற்.ளனபெற உள்சிகள் நடை இப்கொள்ள விருப்பம் உள்ள துசியில் கலந்யிற்ப யிகள்சாவிவ, காட் பாக்கம் வேளாண்மை அறிவியல்டுப்மையத்தை தொடர்பு கொண்டு பயன்.றலாம்பெஇவ்வாறு, தலைவர் கும.வித்தார்ரவேல் தெரி

## சோள தீவனம் விலை கால்நடை துறை அறிவிப்பு

காஞ்சிபுரம்:'கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களில், 1 ரூபாய்க்கு, ஒரு கிலோ தீவன சோளம் விற்பனை செய்யப்படுகிறது' என, கால்நடைத்துறை தெரிவித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1,220 விவசாயிகள், 550 ஏக்கர் பரப்பளவில், கால்நடைகளுக்கான தீவன சோளம் பயிரிட்டுள்ளனர்இவர்கள் ., தங்களது தேவைகளுக்கு போக, மீதமுள்ள சோள தீவனத்தை, பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களில், 2 ரூபாய்க்கு விற்பனை செய்யலாம்த .ீவன சோளம் தேவைப்படும் விவசாயிகள், 1 ரூபாய் மானிய விலையில், பெற்றுக்கொள்ளலாம். இத்தகவலை கால்நடைத்துறை தெரிவித்துள்ளது.

## ஜெயங்கொண்டத்தில் உழவர் பாதுகாப்பு முகாம்

அரியலூர்.ஜெயங்கொண்டத்தில் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது : அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலை பள்ளியில் நடந்த உழவர் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாமில், டி.ஓ.ஆர்., கஸ்தூரி வரவேற்றார். முகாமில் கல்வி உதவி தொகை, திருமண உதவி தொகை, இயற்கை மரணம் அடைந்தவர்களுக்கு ஈமச்சடங்கு உதவி தொகை, முதியோர் உதவி தொகை உள்பட, 2,007 பயனாளிகளுக்கு ஒரு கோடியே, 52 லட்சத்து, 49 ஆயிரத்து, 700 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை, கலெக்டர் சரவண வேல்ராஜ் வழங்கி பேசினார். முகாமில், டி.ஓ.ஆர்., கருப்பசாமி, சமூக பாதுகாப்பு திட்ட உதவி கலெக்டர் ஜீனத்பானு, தாசில்தார்கள் முகுந்தன், ரவி மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## அரியலூரில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம்

அரியலூர்.நாள் கூட்டம் நடந்ததுஅரியலூரில் விவசாயிகள் குறைதீர் : அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்துக்கு, மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் தலைமை வகித்தார் . .வேளாண்மை இணை இயக்குநர் குணசேகரன் வரவேற்றார் விவசாயிகளின் பிரச்னைகள் பற்றி விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் உலகநாதன், செங்கமுத்து, பிச்சைபிள்ளை, ஆண்டிமடம் ஜெயச்சந்திரன், கீழக்காவட்டாங்குறிச்சி மணி, சோழன்குடிக்காடு கணேசன் உள்ளிட்டோர் பேசினர்கோரிக்கைகளுக்கு பதிளித்து . மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் .பேசினர்

கூட்டத்தில் டி.ஓ.ஆர்., கருப்பசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் முருகன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அன்பழகன், தாசில்தார்கள் முருகன், ராம்சந்தர், உதவி வேளாண்மை அலுவலர்கள் காசிநாதன், சுந்தர்ராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வடகிழக்கு பருவமழை எதிரொலிஉஷார் நிலையில் மாவட்ட நிர்வாகம் !

கரூர்வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் : குறித்து கரூர் கலெக்டர்அலுவலகத்தில் கூட்டம் நடந்ததுஇதில் ., கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து பேசியதாவது:

வடகிழக்கு பருவமழையின் போது மாவட்டத்தில் எவ்வித பாதிப்பும் வராத வண்ணம் அனைத்து துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். குறிப்பாக நெடுஞ்சாலைத்துறை மூலம் வடகிழக்கு பருவ மழையின்போது சாலைகளை அவ்வப்போது கண்காணித்து வருவதுடன், பாதிப்படைந்தால் உடனடியாக சரிசெய்திடவும் தயார் நிலையில் இருக்க வேண்டும்த்துறை மூலம் பொதுப்பணி . கண்மாய்கள், பாசன கால்வாய்கள் ஆகியவற்றை உடனுக்குடன் கண்காணித்து பாதிப்பு சூழ்நிலை ஏற்பட்டால், உடனடியாக சரிசெய்யும் அளவில் மணல் மூட்டைகள் மற்றும் பணியாளர்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும். மாவட்ட வழங்கல் துறை மூலம் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கக்கூடிய பகுதிகளை முன்கூட்டியே அறிந்து, அந்த பகுதி மக்களின் தேவைக்கு ஏற்ப, மூன்று மாத கால அளவிற்கு ரேஷன் கடைகளில் அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய் போன்ற வகைகளை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.பொதுசுகாதாரத்துறை மூலம் தொற்று நோய் பரவாமல் இருக்க ஒவ்வொரு பகுதியிலும் மருத்துவ முகாம் அமைத்து செயல்பட வேண்டும்கால்நடைபராமரிப்புத் துறையும் மருத்துவ முகாம் அமைத்து கால்நடைகளை . பாதுகாக்க வேண்டும்.மீன்வளத்துறை மூலம் ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மீட்புகுழு படகுகள் தயார்நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.வருவாய்த்துறை, ஊரகவளர்ச்சி துறையினர் தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக, திருமண மண்டபங்கள், சமுதாயகூடங்கள், அரசுபள்ளி வளாகங்களில் தங்க வைக்க முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்வதுடன், அவர்களுக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளையும் உடனடியாக வழங்க தயார் நிலையில் இருக்க வேண்டும்.மின்வாரியத்தினர் எந்த பகுதியில் பாதிப்பு என உடனுக்குடன் கண்காணித்து சரிசெய்ய வேண்டும்.

காவல்துறை, தீயணைப்புத்துறை அலுவலர்கள் முழுமையாக கண்காணித்து பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், டிஅருணா .ஓ.ஆர்., நேர்முக உதவியாளர் அனிதா உட்பட பலர் பங்கேற்றனர்.

## வாய்க்காலை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை

கோபிசெட்டிபாளையம்நல்லாம்பட்டி கசிவு நீர் திட்ட வாய்க்காலை சீரமைக்க :, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, சங்க தலைவர் செங்கோட்டையன், செயலாளர் வெங்கடாசலபதி ஆகியோர் தெரிவித்ததாவது:

கீழ்பவானி பாசன திட்டத்தில், கோபி உபகோட்டம் கவுந்தப்பாடி பிரிவுக்குட்பட்ட நல்லாம்பட்டி கசிவு நீர் திட்ட வாய்க்காலின் மொத்த நீளம், 3.6 மைல்பாசனப்பரப்பு ., 606 ஏக்கராக உள்ளதுஇரண்டு பங்கு தூரம் வெட்டு வாய்க்காலின் மொத்த நீளத்தில் . ஆழம் வெட்டு வாய்க்காலின் .வாய்க்காலாக உள்ளது, 10 முதல், 25 அடி வரையும், நான்கு அடி முதல் ஐந்து அடி வரை அகலமும் உள்ளது. இதன் காரணமாக அடிக்கடி மண் சரிந்து விழுவதால், அணைக்கட்டில் இருந்து உரிய அளவு நீர் வந்தாலும், வாய்க்காலில் தண்ணீர் வருவது கிடையாதுபாசன நிலங்கள் . .நீரின்றி பாதிக்கப்படுகிறதுமதகு எண், 2க்கு மேல் பகுதியில் நிலமட்டத்துக்கு மேல் வாய்க்கால் வரும் இடங்களில் கால்வாயை பலப்படுத்தி, கான்கிரீட் கால்வாயாக மாற்ற வேண்டும்.சைபன் பாலங்களை பெரிதுப்படுத்தி அகலப்படுத்த வேண்டும் . கசிவு நீர் திட்டங்களுக்கு தனியாக தலைப்பு இல்லாததால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லைகசிவு நீர் திட்டங்களுக்கு நிதி . ஒதுக்க தலைப்பு கணக்கை உருவாக்க, பொதுப்பணி துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்மதகுகளை சீரமைத்தும் ., நீராணிகளை நியமித்தும், சிறப்பு தண்ணீர் விடப்படும் காலங்களிலும், கசிவு நீர் வாய்க்கால்களுக்கும் பாசனத்துக்கு நீர் விட நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.

## காலாவதி விதை விற்பனை அதிகாரி எச்சரிக்கை

ஈரோடுகாலாவதியான விதையை விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை : எடுக்கப்படுமென, விதை ஆய்வு இயக்குனர் அண்ணாத்துரை தெரிவித்தார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

விவசாயிகளுக்கு தரமான விதைகள் விற்பனை செய்வதை உறுதிப்படுத்தவும், விதை விற்பனையாளர்களை கண்காணிக்கவும், விதை சட்டத்தை அமல்படுத்தவும், அரசின் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் விதை ஆய்வு பிரிவு செயல்படுகிறது . துறைகளான வேளாண்மைத்துறை அரசு, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, தமிழ்நாடு கால்நடை பல்கலை, மற்றும் அரசு சார்பு துறைகளான வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், வேளாண் கூட்டுறவு விற்பனை

மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உரிமம் பெற்று விதை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள், காலாவதியான விதைகளை இருப்பு வைத்து விற்பனை செய்வோர் மீது, விதைச்சட்டம், 1966 மற்றும் விதை விதிகள் மற்றும் விதை கட்டுப்பாடு ஆணை1983 ஆகிய சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். முளைப்புத்திறன் குறைந்த விதைகளை இருப்பு வைத்தல், விபர அட்டை இல்லாமல் விதைகள், சுத்தம் செய்யப்படாத தடை செய்யப்பட்ட விதைகள் விற்பனை, ஆதாரமற்ற விதைகள் வைத்திருத்தல், விதைகளுக்கு உண்மை நிலை முளைப்பு சோதனை அறிக்கை இல்லாமல் விற்பனை போன்றவை செய்ய கூடாது, என்றார்.

## மலைகளில் இருந்து வரும் மழைநீர் வீணாவதை தடுக்க தடுப்பணைவிவசாயிகள் : கோரிக்கை

கிருஷ்ணகிரிதடுப்பணைகள் கட்டும் திட்டம் பல ஆண்டுகளாக கிடப்பில் : போடப்பட்டுள்ளதால் மழை பெய்தும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.மலைகள் சூழ்ந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2 லட்சத்து, 2,409 ஹெக்டேரில் வனங்கள் உள்ளதுமாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் . பரப்பு, 1 லட்சத்து 97, 564 ஹெக்டேர் ஆகும்இதனால் வனமும் ., சாகுபடி செய்யப்படும் பரப்பும் ஏறக்குறைய சமமான நிலையிலேயே உள்ளது.

மாவட்டத்தில் மழை காலங்களில் வீணாகும் நீரை தேக்கிவைக்க பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதுகுறிப்பாக மாவட்டத்தில் உள்ள மலை பகுதிகளில் ., 50க்கும் மேற்பட்ட தடுப்பணைகள் கட்டப்பட்டு விவசாயத்திற்காகவும், குடிநீருக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதே போல் கிருஷ்ணகிரி அருகே உள்ள பெரியமலை பகுதிகளிலும் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இந்த மலையின் தொடர்ச்சியாக மலையாண்டஅள்ளி, செலப்சனாம்பட்டி, மகாதேவ கொல்லஹள்ளி, கூச்சக்கல்லூர், ஐகுந்தம் ஆகிய பகுதிகளில் பிள்ளுமலை, கையுண்டு மலை, வால்பாறை மலை, கனவா மலை, மத்தன்போடு மலை ஆகிய மலைகள் உள்ளது. இப்பகுதியில் இங்கு நிலத்தடி நீரை உபயோகித்து கிணற்று பாசனம் மூலம்

பணப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறதுவறட்சியின் காரணமாக . .முற்றிலும் காய்ந்து போவதும் உண்டு சாகுபடி செய்யப்படும் பணப்பயிர்கள் பெரியமலை சுற்றுவட்டார பகுதியில் பருவமழை காலங்களில் அதிக அளவு தண்ணீர் வெளியேறி தென்பெண்ணை ஆற்றில் கலந்து வீணாகியதுஇதனால் பெரிய மலை . பகுதியில் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என விவசாயிகள் பல வருடங்களாக மாவட்ட க்கள் அளித்தும் விவசாயிகள் குறை தீர் கூட்டத்தில் நேரடியாகநிர்வாகத்திடம் மனு .பேசியும் உள்ளனர்இதனை தொடர்ந்து கடந்த, ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்ட வேளாண்மை பொறியியல் துறை அதிகாரிகள், பெரியமலை பகுதியில், 2 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில், ஒரு தடுப்பணையும், மத்தன்போடு மலை பகுதியில் உள்ள வீரமலையில், 3 லட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் மதிப்பில் ,ஒரு தடுப்பணையும் அமைக்கலாம் என்று அரசுக்கு பரிந்துரை செய்தனர். மேலும், இங்கு தடுப்பணைகள் கட்டி நீரை தேக்கி வைத்தால் ஐதொந்தம், ஐகொத்தப்பள்ளி., புதுார், மங்கல்பட்டி, சாமல்பட்டி, காட்டாகரம், சந்துார் ஆகிய பகுதிகளில் உள்ள, 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பயன்பெறும் என்றும் அரசுக்கு அறிக்கை அனுப்பிவைத்தனர்.

ஆனால் ஆய்வு மேற்கொண்டு, ஆறு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் இதுவரையில் தடுப்பணைகள் கட்டாததால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் . மாவட்டத்தில் இந்தாண்டு தென்மேற்கு பருவமழை காரணமாக இப்பகுதியில ் இருந்து மழைநீர் அதிகளவில் தென்பெண்ணை ஆற்றில் கலந்ததால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.
விவசாயிகளின் நலன் கருதி உடனடியாக பெரிய மலை பகுதியில் தடுப்பணைகள் கட்ட மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விவசாய பயிர்களில் பூச்சி தாக்கு

திருப்புத்தூர் திருப்புத்தூரில் போதிய மழை இல்லாததால் :, குறைந்த விட்ட சாகுபடியிலும்,பயிரைப் பூச்சித் தாக்குவதால்,விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், தாமதமாக விவசாயிகள் நடவு செய்தனர்போதிய நீரின்றி., வறட்சியை சந்தித்தனர்இந்த ஆண்டு மழையைஎதிர்பார்த்த . விவசாயிகளுக்கு, வானம் மனது வைக்கவில்லைதிருப்புத்தூர் பகுதியில் விவசாயிகள் .

இருப்பினும் .நடவுப் பணிகளைத் துவக்கவில்லை, கிணறு பாசனத்தை நம்பி, சிறிய விவசாயிகள் நெல் நாற்று நடவுப்பணிகளை, ஒரு வாரமாக செய்து வருகின்றனர்அதிலும் . விவசாயிகளுக்கு கவலையைத்தரும் வகையில், ஆனைக் கொம்பன் ஈ''' என்ற பூச்சித் தாக்குதல் ஏற்பட்டுள்ளதுஇதனால் .,பயிர்கள் முற்றிலுமாக அழியும் நிலை ஏற்பட்டுள்ளதுமழையின்மையால்.,மொத்தமுள்ள சாகுபடி பரப்பான 15 ஆயிரம் ஏக்கரில் சுமார் 10 சதவீத விவசாயப்பணிகளே நடந்துள்ள நிலையில், பூச்சித் தாக்குதல் விவசாயப் பணிளை மேலும், பாதிக்க வைத்துள்ளதுவேளாண் உதவி இயக்குநர் ஷர்மிளா . கூறுகையில், நாற்றங்காலில் 2 கிலோ பியூரடான் குருணை மருந்தினை மணலுடன் கலந்து இட வேண்டும்நடவு வயலில் ., கடைசி உழவின் போது, ஏக்கருக்கு 10 கிலோ குருணை மருந்தினை மணலுடன் கலந்து இட வேண்டும்,என தெரிவித்துள்ளார்.

## தேனி தென்னை நார் கழிவுகள் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி

தேனி தேனி மாவட்டத்தில் :, வேண்டாத கழிவுகளாக கருதப்பட்டு வந்த தென்னை நார் கழிவுகள், தற்போது அரபுநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. மாவட்டத்தில், தென்னை நார் கயறு தொழிற்சாலைகள் அதிகம் உள்ளனஇவற்றில் . இருந்து வீணாகும் தென்னை நார் கழிவுகள் வேண்டாத பொருளாக கருதப்பட்டதால் தற்போது .எரித்து வந்தனர் மொத்தமாக காலியிடத்தில் கொட்டி தீ, அரபு நாடுகளுக்கு அதிகளவில் இவை ஏற்றுமதியாகின்றனஇதனால் மதிப்பு மிகுந்த பொ .ருளாக கருதப்படுகிறதுதேனி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் . தனது எடையை (தும்பு) தென்னை மட்டையில் இருந்து தயாராகும் மஞ்சு :கூறியதாவது .அதிக தண்ணீரை தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் தன்மை கொண்டது விட ஆறு மடங்கு எனவே தண்ணீர் பற்றாக்குறை உள்ள அரபு நாடுகளில், மரங்களை சுற்றி இந்த தென்னை மஞ்சுவை கொட்டி நீர் பாய்ச்சுகின்றனர்இதனால் ., மரங்கள் வேர்கள் மூலம் மஞ்சுவிடம் இருந்து தண்ணீரை உறிஞ்சு கொள்கின்றனழில்நுட்பம் அரபு இந்த புதிய தொ . எனவே .நாடுகளின் அதிகளவில் கடைபிடிக்கப்படுகிறது, தேனி மாவட்டத்தில் இருந்து தென்னை நார் கழிவுகள் அதிகளவில் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றனநம் . நாட்டிலும் வறண்ட பகுதிகளில் மரங்கள், பழப்பயிர் சாகுபடி செய்பவர்களுக்கு இந்த தொழில்நுட்பம் பின்பற்றப்படுகிறதுஇதனால் தென்னை நார் கழிவுகளுக்கு ., அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது, என்றார்.

## மழையை எதிர்பார்த்து விவசாயிகள்காத்திருப்பு பெரியகுளம் தாலுகாவில் ... சோதனை

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில், முதல்போகநெல் சாகுபடிக்கு நாற்றங்கால் பணியை மேற்கொள்வதற்கு மழையை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்கின்றனர். பெரியகுளம் தாலுகாவில்,மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் வராகநதியாக ஓடுகிறது. இந்த ஆறு பெரியகுளம், வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சிந்துவம்பட்டி, குள்ளப்புரம் வழியாக சென்று வைகை ஆற்றில் கலக்கிறது. சில்வார்பட்டி சிறுகுளம், நல்லகருப்பன்பட்டி நாரணன்குளம், பொம்மிநாயக்கன்பட்டி சிறுகுளம், மருகால்பட்டி சிறுகுளம், ஜெயமங்கலம் வேட்டுவன்குளம் உட்பட 15க்கும் மேற்பட்ட கண்மாய்களுக்கு வராகநதியில் வரும் நீர் ஆதாரமாக உள்ளது. இவை தவிர, தேவதானப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, புல்லக்காபட்டி, கெங்குவார்பட்டி, சாத்தாகோயில்பட்டி கிராமங்களில் மஞ்சாளார் அணையில் தேங்கும் நீரை ஆதாரமாக கொண்டுள்ளது. சோத்துப்பாறையில் தேங்கும் நீரைக் கொண்டு லட்சுமிபுரம் பகுதி பாசன வசதி பெற்று வருகிது. இவ்வாறான நீர்ஆதாரங்கள் மூலம் பெரியகுளம் தாலுகாவில் 15 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவில் முதல் போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் கண்மாய்கள் நிரம்பவில்லை. பெரும்பாலான கண்மாய்களுக்கு நீர்வரத்தே இல்லை. இதனால் மஞ்சளார் பாசனம், வராகநதி பாசன விவசாயிகள் முதல்போக நெல்சாகுபடியை தவிர்த்தனர். தொடர்ந்து வறட்சி நிலவி வரும் நிலையில், நடப்பு பருவத்தில் பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில், முதல்போக நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் பணியை மேற்கொள்ள விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

## உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு மத்திய அரசு மானியம் வழங்கல்

திண்டுக்கல்உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க மத்திய அரசு மானியம் : மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் .வழங்கி வருகிறது தொழில் நுட்ப மேம்பாடு:அறிவித்துள்ள மானிய விபரங்கள் வருமாறு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் கருவிகள் மற்றும் தளவாடங்கள் மற்றும் தொழில்பட்ப கட்டுமானத்திற்கு 25 சதவீதம் அதிகபட்சம் ரூ.50 லட்சம் வழங்கப்படுகிறது.குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம், தொழில் நுட்ப கட்டுமானத்திற்கு 35 சதவீதம் அதிகபட்சம் ரூ.5 கோடி வழங்கப்படும்ணவு உ.

பதப்படுத்தும் தொழில்நுட்பம் தொடர்பான பட்டயப் படிப்புகளுக்கான உள் கட்டமைப்பு வசதிகள், புத்தகங்கள் பரிசோதனைக்கூட கருவிகள் போன்றவற்றிற்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.தொழில் முனைவோர் பயிற்சிக்கு தலா ரூ .3 லட்சம், பல பொருட்கள் பயிற்சி முதலீட்டிற்கு ரூ.15 லட்சம், சுழற்சி முதலீட்டிற்கு ரூ.5 லட்சம் வழங்கப்படும் . கிராமப்புறங்களில் முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள், சேமிப்பு மையங்கள் அமைக்க, திட்ட மதிப்பில் 50 சதவீதம் அதிகபட்சம் ரூ.2.50 கோடி வழங்கப்படும் . ம் இயக்கவிண்ணப்பங்களை மாவட்டங்களில் செயல்படும் உணவு பதப்படுத்து குழுவினர், துணை இயக்குனர் மூலமாக அனுப்பவேண்டும் (வேளாண் வணிகம்), என, தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கம் அறிவித்துள்ளது.

தினத் தந்தி

## விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்



திருவள்ளூர்,

மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் செல்வமணி, வேளாண்மை இணை இயக்குனர் சுந்தர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுப்பிரமணியன், பொன்னேரி ஆர்.டி.ஓ. பார்த்தீபன், திருவள்ளூர் ஆர்.டி.ஓ. அபிராமி, அம்பத்தூர் ஆர்.டி.ஓ. மாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையின் உபரிநீரை பாசனத்துக்கு பயன்படுத்த கோரி மோட்டார் சைக்கிள் ஊர்வலம்



கொளத்தூர்,

மேட்டூர் அணையில் இருந்து வெள்ளப்பெருக்கின்போது, வெளியேற்றப்படும் உபரிநீரை பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த கோரி தமிழக ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பில் கொளத்தூரில் நேற்று மோட்டார் சைக்கிள் ஊர்வலம் நடந்தது.

இந்த ஊர்வலத்தை பெரியார் திராவிடர் கழக நிறுவனர் கொளத்தூர் மணி கொடியசைத்து தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் வெளியேறும் உபரிநீரை மேட்டூர் அணையின் வலது கரை வாய்க்கால் மூலம் வெளியேற்றி தோணிமடுவு பகுதிகளில் தடுப்பணை கட்டுவதன் மூலம் அந்தியூர், ஆப்பகூடல் வரை சுமார் 1 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற முடியும். எனவே, இந்த திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக ஐக்கிய விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சண்முகம், மாவட்ட செயலாளர் ராஜேஸ்வரன், மூத்த வக்கீல் பா.பா.மோகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.